இராஜசிம்ம பல்லவன் கட்டிய காஞ்சி கைலாசநாதர் கோயில் நில அதிர்வுகளை தாங்கும் வலிமை கொண்டது. இதில் இருக்கும் பாரமான கருங்கற்களின் எடையை அடித்தளத்துக்குச் சீராகக் கடத்த திடமான சுமை தாங்கும் சுவர்கள், அடுக்கு விமான நுட்பம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

காஞ்சியில் உள்ள பல்லவர் கால கட்டுமானக் கோயில்களில் சிமெண்ட் / சுண்ணாம்பு இல்லாமல் கற்களை 'இன்டர்லாக்கிங்' முறையில் பிணைத்து, புவிஈர்ப்பு விசைக்கு ஏற்ப நிலைநிறுத்தி கட்டிடங்களை உருவாக்கியுள்ளனர். இது பொறியியல் சாதனையாகும்.

திருப்போரூரில் திருத்தேரோட்டம்

■ திருப்போரூர்/காஞ்சி/திருத்தணி

காஞ்சி காமாட்சி, திருப்போரூர் கந்தசுவாமி, திருத்தணி முருகன் கோயில்களில் நேற்று தேரோட்டம் நடைபெற்றது.

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் கந்தசுவாமி கோயிலில், இந்த ஆண்டுக்கான பிரம்மோற்சவம் கடந்த 21-ம் தேதி தொடங்கியது. பிரம்மோற்சவத்தின் 7-ம் நாளான நேற்று திருத்தேரோட்ட உற்சவம் நடைபெற்றது. இதில், சிறப்பு மலர் அலங்காரத்தில் கந்தசுவாமி பெருமான் தேரில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்தார். பின்னர், சிறப்பு வழிபாடுகளுடன் ஏராளமான பக்தர்கள் அரோகரா அரோகரா என முழக்கமிட்டவாறு தேரை வடம் பிடித்து இழுத்தனர். இதையடுத்து, மாட வீதிகளில் தேர் வலம் வந்தது.

காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் கோயில் மாசி மக பிரம்மோற்சவ விழா கடந்த வாரம் கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழாவின் 7-ம் நாளான நேற்று அதிகாலை முதலே அம்மனுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் மற்றும் அலங்காரங்கள் செய்யப்பட்டன. அதனைத் தொடர்ந்து, சர்வ அலங்காரத்துடன் காமாட்சி அம்மன் தேரில் எழுந்தருளினார். பின்னர் வேத மந்திரங்கள் முழங்க, மங்கல வாத்தியங்கள் இசைக்க ராஜவீதிகளில் அம்மன் தேரில் உலா வந்தார்.

திருத்தணி சுப்ரமணியர் கோயிலில் தேர்த் திருவிழா நேற்று மாலை நடைபெற்றது. அலங்கரிக்கப்பட்ட தேரில் சுப்பிரமணியர், வள்ளி, தெய்வானையுடன் எழுந்தருளி மாட வீதிகளில் உலா சென்று பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

மீஞ்சூர் அருகே மின் இணைப்பு வழங்க ரூ.4 ஆயிரம் லஞ்சம் வாங்கிய

மின்வாரிய ஊழியருக்கு 3 ஆண்டு கடுங்காவல் சிறை

திருவள்ளூர் மாவட்ட முதன்மை நீதிமன்றம் தீர்ப்பு

■ திருவள்ளூர்

மீஞ்சூர் அருகே மின் இணைப்பு வழங்க ரூ.4 ஆயிரம் லஞ்சம் வாங்கிய மின்வாரிய லைன் இன்ஸ்பெக்டருக்கு 3 ஆண்டு கடுங்காவல் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர் அருகே உள்ள அத்திப்பட்டு, ராஜீவ்காந்தி நகரைச் சேர்ந்தவர் ஆயிஷா பேகம். இவர், தனது சிமெண்ட் சீட்டால் ஆன மேற்கூரை கொண்ட வீட்டுக்கு ஒரு முனை மின் இணைப்பு வழங்க கோரி, கடந்த 2012-ம் ஆண்டு மீஞ்சூர் அருகே உள்ள மேலூர் மின்சார வாரிய அலுவலக லைன் இன்ஸ்பெக்டரான மதியழகனை அணுகினார். அப்போது, மதியழகன், மின் இணைப்பு வழங்க ரூ.4,000 லஞ்சம் தர வேண்டும் என ஆயிஷா பேகத்திடம் கேட்டுள்ளார்.

ஆனால், மின் இணைப்புக்காக லஞ்சம் கொடுக்க விரும்பாத ஆயிஷா பேகம், லஞ்ச ஒழிப்புத் துறையின் சென்னை நகர சிறப்பு பிரிவு-1 போலீஸாரிடம் புகார் அளித்தார். இதுகுறித்து, ஊழல் தடுப்பு சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்த லஞ்ச ஒழிப்புத் துறை போலீஸார், மதியழகன், ஆயிஷா பேகத்திடம் இருந்து ரூ.4 ஆயிரத்தை லஞ்சமாக பெற்றபோது, அவரை கைது செய்தனர்.

திருவள்ளூர் மாவட்ட முதன்மை, அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த இந்த வழக்கு விசாரணையில், மதியழகன் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டது. இதையடுத்து, திருவள்ளூர் மாவட்ட முதன்மை நீதிமன்ற நீதிபதி ஜூலியட் புஷ்பா நேற்று தீர்ப்பளித்தார்.

அதில், மதியழகனுக்கு மின் இணைப்பு வழங்க ரூ.4,000 லஞ்சம் வாங்கிய குற்றத்துக்கு ஊழல் தடுப்பு சட்டப்பிரிவு 7-ன் படி 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறை, ரூ.10,000 அபராதம், ஊழல் தடுப்பு சட்டப்பிரிவு 13-ன் படி 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறை, ரூ.10,000 அபராதம் விதித்து, நீதிபதி உத்தரவிட்டுள்ளார். இத்தண்டனைகளை மதியழகன் ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது

சென்னை நுங்கம்பாக்கம் 2 கிளை
சத்யா பிளாசா, எண்.7, திருமூர்த்தி நகர் மெயின் ரோடு நுங்கம்பாக்கம், சென்னை-600 034 Mob: 94460 73359 / 94983 46053 E-MAIL: cb16018@canarabank.com
Canara Bank கனரா வங்கி Syndicate சிண்டிகேட்

பொது அறிவிப்பு

இந்த நபர், Mr.C.வெங்கடேசன் அவர்கள் கனரா வங்கி, சென்னை நுங்கம்பாக்கம் 2 கிளையில் PIGMY (NNND) கலெக்ஷன் ஏஜெண்டாக (சேகரிப்பு முகவராக) 11.12.1982 முதல் பணிபுரிந்து வந்துள்ளார். 31.12.2025 தேதியன்று வேலையை ராஜினாமா செய்துள்ளார். மேலும் அவரது சேமிப்புத் தொகை மற்றும் (Gratuity) ஆகியவற்றை வங்கி செட்டில் செய்ய முடிவு எடுத்துள்ளது.

எனவே அவரிடம் PIGMY (NND) சேகரிப்பு கணக்குகளை தொடங்கிய அனைத்து வாடிக்கையாளர்களும் 30 நாட்களுக்குள் தங்கள் கணக்குகள் தொடர்பாக நிலுவைகள் ஏதும் இருப்பின் கிளை மேலாளரை தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். அதன் பின்னர் வரும் கோரிக்கைகள் ஏற்கப்பட மாட்டாது. அனைத்து வாடிக்கையாளர்களும் கிளை மேலாளரைத் தொடர்பு கொண்டு தங்களது PIGMY (NND) கணக்கு இருப்பை உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கிளை மேலாளர்
தேதி : 28.02.2026 சென்னை நுங்கம்பாக்கம் 2 கிளை

தி.நகர் II கிளை
எண்.9 & 10, சர் தியாகராயா ரோடு, தியாகராயா நகர், சென்னை-600017
Mob: 86748 56819 / 94983 46053
E Mail: cb16003@canarabank.com
Canara Bank கனரா வங்கி Syndicate சிண்டிகேட்

தங்க நகை இ-ஏல விற்பனை அறிவிப்பு

கனரா வங்கி, தி.நகர் II கிளையில் தங்க நகையை அடமானம் வைத்து அதன் பேரில் நகைக் கடன் வசதி பெற்ற பின்வரும் கடன்தாரருக்கு அறிவிப்புகள் அனுப்பப்பட்டு கடன் நிலுவைத் தொகைகளை திரும்ப செலுத்துமாறு கோரப்பட்டது. ஆனால் அந்த கடன்தாரர் தங்களது நகைக்கடன் பேரில் உள்ள கடன்பாக்கியை செலுத்த தவறிவிட்டார். எனவே வங்கியிடம் அடமானத்திலுள்ள அவரது தங்க நகையை 25.03.2026 தேதியன்று ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டிய அவசியமும் மற்றும் கட்டாயமும் வங்கிக்கு ஏற்பட்டுள்ளது. ஏலத்தில் நகையை விற்பனை செய்வதன் மூலம் உபரித்தொகை எதுவும் கிடைக்குமானால் அந்த தொகை வங்கிக்கு செலுத்த வேண்டிய இதர கடன் தொகை கணக்கில் வரவு வைக்கப்பட்டு மீதி தொகை ஏதேனும் இருப்பின் அது கடன்தாரருக்கு திருப்பி தரப்படும். அதே போல் ஏலத்தில் குறைவான தொகை கிடைக்குமானால் வங்கிக்கு கிடைக்க வேண்டிய மீதி கடன்பாக்கித் தொகையை உரிய சட்ட நடைமுறைகள் மூலம் அவர்களிடமிருந்து வசூலிப்பதற்கான நடவடிக்கைகளை வங்கி எடுக்கும். பின்வரும் நகை கணக்குக்குரிய எந்தவொரு நகையையும் முன் அறிவிப்பும் இன்றி ஏலத்திலிருந்து அகற்றிவிட கனரா வங்கிக்கு உரிமை உண்டு. மேலும் கனரா வங்கிக்கு எந்த முன் அறிவிப்பும் இன்றி ஏலத்தேதி / நேரத்தை மாற்ற அதிகாரம் உண்டு.

கடன்தாரர் பெயர்	கடன் கணக்கு எண்	26.02.2026 அன்றுள்ளபடி நிலுவைத்தொகை + வட்டி & இதர கட்டணங்கள்	நகையின் எடை (கிராமில்)
Ms.அபிதா வில்சன் 7/248, செம்பரம், காட்டுவிளை மருதங்கோடு, விலவங்கோடு கன்னியாகுமரி-629163	180134881865	₹ 1,89,987.21	42.40
	180131967073	₹ 1,70,127.87	38.50
	180131965284	₹ 1,51,145.24	37.00
	180131965755	₹ 1,14,297.03	33.00

EMD Remittance : Canara Bank, T.Nagar II Branch, A/c No 209272434 IFSC Code:CNRB0016003

EMD தொகை: ₹ 25,000/- ஒவ்வொரு கணக்கிற்கும்

இ-ஏல தேதி & நேரம் 25.03.2026 நேரம்: நண்பகல் 12.00 முதல் மதியம் 03.00 வரை through www.gerpegov.com/canarabank

டேவணித் தொகையினை 20.03.2026 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ மாலை 4.00 மணிக்குள் செலுத்த வேண்டும்

நேரடியாக பார்வையிடும் தேதி: 10.03.2026 & 17.03.2026 மாலை 04:00 மணி முதல் 05:00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு தி.நகர் II கிளை மேலாளரை தொடர்பு கொள்ளவும்.

தேதி: 26.02.2026, இடம்: சென்னை அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கனரா வங்கி

எஸ்.ஏ. கலை, அறிவியல் கல்லூரி ஆண்டு விழாவின்போது விழா மலர் வெளியிடப்பட்டது.

எஸ்.ஏ. கல்லூரியில் ஆண்டு விழா

சாதனை புரிந்த பேராசிரியர்களுக்கு சான்றிதழ்

■ சென்னை

எஸ்.ஏ. கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் ஆண்டு விழா நடைபெற்றது.

விழாவில் கல்லூரிச் செயலர் தசரதன் தலைமையுரை நிகழ்த்தினார். அறங்காவலர் குழு இணைச் செயலாளர் எஸ்.கோபிநாத், கல்லூரி இயக்குநர் சாய் சத்யவதி, சுதர்சனம் வித்யாஷ்ரம் பள்ளி இயக்குநர் டி.சரஸ்வதி, கல்லூரி இயக்குநர் எஸ்.அரவிந்த், எஸ்.ஏ. பொறியியல் கல்லூரி இயக்குநர் டி.சபரிநாத், கல்லூரி தாளாளர் ப.வெங்கடேஷ் ராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். முதல்வர் மாலதி செல்வக்குமார் கல்லூரியின் ஆண்டறிக்கையை வழங்கினார்.

சொற்பொழிவாளர், எழுத்தாளர் மற்றும் பட்டிமன்றப் பேச்சாளர் பாரதி பாஸ்கர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

அவர் உரையாற்றுகையில், "கல்லூரியில் நல்ல உறவுகள் உருவாகும். செயற்கை நுண்ணறிவு நாளை உலகை ஆளும். தோல்விகளை வெளியே சொல்வதற்குக் கூட ஒரு வெற்றி தேவைப்படுகிறது. நீ வெற்றி பெறுவதற்கு நீயே பொறுப்பு. கல்லூரி தருகின்ற வாய்ப்புகள் திரும்ப வராது. எனவே வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்" என்று மாணவர்களிடம் வலியுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் கல்லூரி ஆண்டு விழா மலர் வெளியிடப்பட்டது. பல்வேறு பிரிவுகளில் சாதனை புரிந்த மாணவர்களுக்குச் சான்றிதழும் கேடயமும் வழங்கப்பட்டது. கல்வியாண்டில் சாதனை புரிந்த பேராசிரியர்களுக்கு ரொக்கப் பரிசும், சான்றிதழும் வழங்கப்பட்டது.

விநாயகர் கோயிலில் கட்டண கொள்ளை

இணை ஆணையரிடம் பக்தர்கள் புகார்

■ தாம்பரம்

மேற்கு தாம்பரம் செல்வ விநாயகர் கோயில் பக்தர்கள் சார்பில், காஞ்சிபுரம் மண்டல இந்து அறநிலைத் துறை இணை ஆணையரிடம், புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது.

அந்த புகாரில் கூறப்பட்டுள்ள தாவது: தாம்பரம் பேருந்து நிலையம் அருகே செல்வ விநாயகர், கோதண்டராமர் கோயில் உள்ளது. இக்கோயில் இந்து அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ளது. இக்கோயிலில் பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் பணத்துக்கு உரிய ரசீது வழங்கப்படுவதில்லை. பிரதோஷம், சங்கடஹர சதுர்த்தி போன்ற உற்சவங்களுக்கு ரூ.150-க்கு மட்டுமே ரசீது வழங்கப்படுகிறது. அதுவும், சமீபகாலமாக வழங்கப்படுவதில்லை.

பக்தர்களிடம் இருந்து அதிகமான தொகையை வசூல் செய்கின்றனர். பிரதோஷ உற்சவ கட்டணமாக ரூ.6,000 வசூலிக்கப்படுகிறது. ஆனால் பால், தயிர், சந்தனம், இளநீர், பழம், வாசனை திரவியம் உள்ளிட்ட பொருட்களை, பொதுமக்களிடம் இருந்து சேகரித்து அபிஷேகம் செய்கின்றனர்.

இந்த பணத்தை, சொந்த ஜி-பே மூலமே வாங்குகின்றனர். இது போல் பல சம்பவங்கள் நடக்கின்றன. இக்கோயிலில் நடக்கும் கட்டண கொள்ளை குறித்து, செயல் அலுவலரிடம் பல முறை புகார் கொடுத்தும் அவர் கண்டு கொள்வதே இல்லை.

எனவே, இதுதொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். உற்சவங்களுக்கு உரிய கட்டணம் நிர்ணயிக்க வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

[விதி 13-ஐ பார்க்கவும்]
ஈவுக்தொகை அறிவிப்பு

திவால்நிலை மற்றும் திவால்நிலை விதிகள் 2019-ன் விதி 13 உடன் படிக்கப்பட்ட திவாலநிலை மற்றும் திவால்நிலை குறியீடு, 2016-ன் பிரிவு 176(1)(a)-ன்கீழ் (கார்ப்பரேட் கடன்தாரர்களுக்கு தனிப்பட்ட ஜாமீன்தாரர்களுக்கான திவால்நிலை செயல்முறைக்கான தீர்ப்பளிக்கும் அதிகாரத்திற்கு விண்ணப்பம்)

திரு. V முத்துச்சந்திரசேகர் (என்கின்ற நாகர்ஜுன் வெங்கட்) குளோபல் இன்போநெட் டிஸ்ட்ரிபியூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டின் தனிப்பட்ட உத்தரவாதம்) அவர்களுக்கு கடன் அளித்தவர்களின் கவனத்திற்கு

தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம், திரு. ஏ முத்துச்சந்திரசேகர் (என்கின் நாகர்ஜுன் வெங்கட்) மீது திவால்நிலை செயல்முறையைத் தொடங்க 21.05.2025 அன்று உத்தரவிட்டுள்ளதாக இதன்மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது.

திவால்நிலை மற்றும் திவால்நிலைச் சட்டம், 2016-ன் பிரிவு 176 உடன் படிக்கப்பட்ட பிரிவு 178-ன்படி இறுதி ஈவுத்தொகையை அறிவிக்கும் தனது நோக்கத்தை திவால்நிலை அறங்காவலர் இதன்மூலம் பின்வருமாறு அறிவிக்கிறார்:

தொடர்புடைய விவரங்கள்

1.	ஈவுத்தொகை விநியோகிக்க முன்மொழியப்பட்ட தேதி	30-03-2026
2.	ஈவுத்தொகைக்கு உரிமை உள்ள கடன் வழங்குநர்களின் பட்டியல் மற்றும் அதன் தொகை	கடன் வழங்குனவரின் பெயர் : பாரத ஸ்டேட் வங்கி முன்மொழியப்பட்ட ஈவுத்தொகை அறிவிப்பு தொகை : ரூ.2,66,642
3	ஈவுத்தொகை விநியோகத்திற்காக கடன் அளித்தவரிடமிருந்து தேவைப்படும் விவரங்கள் மற்றும் அத்தகைய விவரம் பெறுவதற்கான கடைசி தேதி	கடன்களுக்கான ஆதாரத்தை இன்னும் சமர்ப்பிக்காத கடன் அளித்தவர்கள், தங்கள் கோரிக்கைகள் ஏதேனும் இருந்தால், படிவம் - F-ல் மட்டும் பரிந்துரைக்கப்பட்ட விவரங்களுடன் சமர்ப்பிக்க வேண்டும்
4	கடன் அளித்தவர்கள் திவால்நிலை அறங்காவலரிடம் எஸ்டேட்டுக்கு எதிரான தங்கள் உரிமைகோரலை நிறுவ வேண்டிய கடைசி தேதி, ஏற்கனவே செய்யப்படவில்லை என்றால்	15-03-2026

மேலும் ஈவுத்தொகை அறிவிக்கப்படாது என்றும் அறிவிக்கப்படுகிறது.
கோரிக்கைகளை ஆதாரத்துடன் 15.03.2026 அன்று அல்லது முன் திவால்நிலை அறங்காவலரிடம் மின்னணு வழிமுறைகள் மூலமாகவோ அல்லது நேரில் அல்லது பதிவு செய்யப்பட்ட தபால் அல்லது விரைவு தபால் அல்லது கூரியர் மூலமாகவோ பின்வரும் முகவரியில் சமர்ப்பிக்கலாம் :
பெயர் : அஜய் குப்தா
E-mail: bt.muthuchandrasekar@gmail.com, ip.ajaygupta@corpvisory.com;
முகவரி : U-318, 3வது தளம், டவர்-8, KLJ நொய்டா ஒன், B-8, செக்டர்-62, கௌதம் புத்தா நகர், நொய்டா, உபி.- 201309
IBBI பதிவு எண். IBBI/IPA-001/IP-P00140/2017-18/10304
குறிப்பு : பொய்யான அல்லது தவறாக வழநடத்தும் கூற்றுகளை ஆதாரத்துடன் சமர்ப்பிப்பது திவால்நிலை மற்றும் திவால்நிலை சட்டம், 2016 மற்றும் பிற பொருந்தக்கூடிய சட்டங்களின் விதிகளின்படி அபராதம் அல்லது சிறைத்தண்டனைக்கு வழிவகுக்கும்.

நாள் : 28.02.2026 அஜய் குப்தா
இடம் : புது டெல்லி (திவால்நிலை அறங்காவலர்)
IBBI/IPA-001/IP-P00140/2017-18/10304

வரி விளம்பரங்கள்

சுய செய்தி

பெயர்மாற்றம்

I, D Meeni W/o Dhanasekaran R/o 28/29, Udhaya nagar exten, Manikandan street, Porur, Chennai, tamilnadu 600116 have changed my name to D Meni for all purposes.

I, Midhun Edavana Manoharan, son of Thiru Manoharan, born on 26th May 1993 (District of Birth: Thrissur-Kerala), residing at No 2, Veethi Mariamman Kovil 2nd Street, Jaferkhanpet, Ashok Nagar, Chennai-600083 shall henceforth be known as Midhun Manoharan

வாடகை

அலுவலகம் வாடகைக்கு

Fully Furnished Office Space for Rent At Nungambakkam Chennai 160 & 110 Seating Capacity With Cabins Contact 8056218395

ஆட்கள் தேவை

பொது

Need 3 persons steam ironin near TIDEL OMR. Available Training. 9am-6pm, 15000 CT:9738050504

சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா
सेन्ट्रल बैंक ऑफ इंडिया
Central Bank of India
பிராந்திய அலுவலகம்: 48/40, மாண்டியத் ரோடு, சென்னை, எழும்பூர் - 600 035. போன் : 044-28883208, 28883217 மின்னஞ்சல் : recvchenro@centralbank.co.in

விற்பனை மற்றும் இ-ஏல விற்பனை அறிவிப்பு (SARFAESI சட்டம் 2002 இன் கீழ்)

கடன் ஈட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடன் ஈட்டுச் சொத்துக்கள் அமலாக்க சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண். 8(6)ன் கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை விற்பனை செய்தல்.
சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியாவால் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்தினை சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் நேரடி சுவாதீனத்தில் எடுக்கப்பட்டு அந்த சொத்து "உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே" என்ற அடிப்படையில் பெற வேண்டிய கடன் தொகை மற்றும் வட்டி, இதர செலவுகளை ஈடுகட்டுவதற்காக (https://baanknet.com) என்ற இணையதளம் வழியாக விற்பனை செய்யப்படுமென இதன்மூலம் பொதுமக்களுக்கும் குறிப்பாக கடன்தாரர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது. குறைந்தபட்ச கேட்பு விலை மற்றும் டேவணி தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. விற்பனையின் (https://www.centralbankofindia.co.in) என்ற இணையத்தளத்தில் வழங்கப்பட்டுள்ள இணைப்பைப் பார்க்கவும்.
வ.எண் 1: கடன்தாரர் : திரு. லூயிஸ் லூர்து ராஜ் G.F. எண். 35/12, திரௌபதி அம்மன் கோயில் 5வது தெரு, வேளச்சேரி, சென்னை - 600042. மேலும் இங்கு: பிளாட் எண் 11, தரை தளம், பிளாக் E, ஜூபிலி பிளாட்ஸ், கதவு எண் 9/516, ஒட்டியம்பாக்கம் சாலை, சித்தலபாக்கம், சென்னை - 600 126.
கோரிக்கை அறிவிப்பு:31.07.2018, சுவாதீன அறிவிப்பு தேதி: 23.10.2018, மொத்த கடன் நிலுவை தொகை (25.02.2026 நிலவரப்படி) ரூ. 38,72,737.00/- மற்றும் வட்டி, கட்டணங்கள்.

அடமானம் வைக்கப்பட்ட சொத்துக்களின் விவரங்கள்

242 சென்ட் அல்லது 105415 சதுரஅடி பரப்பளவு கொண்ட மூலப்பெருநிலத்தின் பெரும்பகுதி பரப்பளவான 217.56 சென்ட் அல்லது 94859 சதுரஅடி நிலப்பரப்பில் 465 சதுரஅடி பிரிவுபடாத அடிமனையுடன் எண். 122, சித்தலப்பாக்கம் கிராமம், கதவு எண் 9/516, ஒட்டியம்பாக்கம் பிரதானசாலை, தாம்பரம் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம், தற்போது சென்னை - 600 126 இல் அமைந்துள்ள பழைய சர்வே எண். 37/2, புதிய சர்வே எண். 37/22 மற்றும் பழைய சர்வே எண். 37/23, புதிய சர்வே எண் 37/23B, இல் உள்ள 30.11.2000 தேதியிட்ட CMDA ஆல் முறையாக அங்கீகரிக்கப்பட்ட மனைப் பிரிவில் (அனுமதி எண்.B/SPL.BL/414(A/E)/2000) மற்றும் உள்ளாட்சி அமைப்பான சித்தலப்பாக்கம் பஞ்சாயத்து மூலம் 17.02.2001 தேதியிட்ட அனுமதி எண். 28/2000-2001 மூலம், கட்டப்பெற்ற ஜூபிலி பிளாட்ஸ் எனப்படும் அடுக்குமாடி குடியிருப்பில் தரைத்தளத்தில் அமைந்துள்ள அடுக்ககம் எண். E-11, 475 சதுரஅடி பரப்பளவு கொண்டது – பொதுப்பாதை, மின்சார இணைப்பு மற்றும் பொதுவான இதர வசதிகளைக் கொண்ட பரந்துபட்ட அளவிலான நிலத்தின் எல்லைகள் வடக்கு: சர்வே எண். 31 & 32, தெற்கு: சாலை
கிழக்கு: சர்வே எண். 39 & 40, மேற்கு: சர்வே எண். 36 தென்சென்னை மற்றும் தாம்பரம் சார்பதிவாளர் பதிவு மாவட்ட வரம்புக்குள் அமைந்தது.

குறைந்தபட்ச கேட்பு விலை: ₹17,50,000/- டேவணித்தொகை (EMD): ₹ 1,75,000/- ஏல உயர்வுத்தொகை: ₹20,000/-
சொத்துக்கான டேவணித்தொகை (EMD) சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம்: 17.03.2026, மாலை 3:30 மணிக்குள்.
சொத்துக்களை பார்வையிடும் தேதி மற்றும் நேரம்:10.03.2026 அன்று காலை 10 முதல் மாலை 4 வரை
வ.எண் 2: கடன்தாரர்கள் : 1. மறைந்த திரு.உமாபதி.A த/பெ திரு. அண்ணாமலை (அவரது சட்டப்பூர்வ வாரிசு மூலம் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறார்): 1. திருமதி செல்வி உமாபதி க/பெ திரு உமாபதி A, 2. திரு U. குணசீலன் த/பெ திரு உமாபதி A, 3. செல்வி U. கீதா த/பெ திரு உமாபதி A. முகவரி 1: பிளாட் எண் F-27, 1வது தளம், பிளாக் எண். 2, காம்பாக்ட் ஹோம்ஸ், மதுலிகா, வண்டலூர் – ஓரகடம் சாலை, காரணைதாங்கல் கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா, காஞ்சிபுரம் - 602 105. முகவரி 2: 118 ,5 வது குறுக்கு தெரு டிரைவர்கள் காலனி பட்டாபிராம் சென்னை 600072, முகவரி 3: 1-1 புதுர்நாடு திருப்பத்தூர் புதூர் நாடு வேலூர்-635 655.
கோரிக்கை அறிவிப்பு:06.07.2024, சுவாதீன அறிவிப்பு தேதி: 20.11.2024, மொத்த கடன் நிலுவை தொகை (25.02.2026 நிலவரப்படி) ரூ. 29,56,255.00/- மற்றும் வட்டி, கட்டணங்கள்.

அடமானம் வைக்கப்பட்ட சொத்துக்களின் விவரங்கள்

சர்வே விவரங்கள்: சர்வே எண். 23/2A4 பகுதி, 23/3 பகுதி, 28/2 பகுதி, 27/5B பகுதி, 27/5C பகுதி, 29/1 பகுதி, 29/2A பகுதி, 29/2B பகுதி - 31/1 பகுதி
அட்டவணை A: முழு நிலம்: காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா, காரணைத்தாங்கல் கிராமம் எண் 183 இல் அமைந்துள்ள, 90,696.30 சதுர அடி (208.21 சென்ட்) மொத்த நிலப்பரப்பு, பின்வரும் சர்வே எண்களில் உள்ளடங்கியுள்ளது: 23/2A4 பகுதி, 23/3 பகுதி, 23/2 பகுதி, 27/5B பகுதி, 27/5C பகுதி, 29/1 பகுதி, 29/2A பகுதி, 29/2B பகுதி, - 31/1 பகுதி. இது செங்கல்பட்டு பதிவு மாவட்டம் மற்றும் சுங்குவார்சத்திரம் சார்பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது.
அட்டவணை B: அடுக்குமாடி குடியிருப்பு: அடுக்கக எண் F-27, கொண்ட ஒரு குடியிருப்பு பகுதி. இது "காம்பாக்ட் ஹோம்ஸ் - மதுலிகா" என்று குறிப்பிடப்பட்ட, பிளாக் எண் 2-ல் உள்ள அடுக்குமாடி கட்டிடத்தின் முதல் தளத்தில் அமைந்துள்ளது. பரப்பளவு: பொதுவான பகுதி உட்பட 650 சதுர அடி. பிரிக்கப்படாத பங்கு: அட்டவணை A-இல் விவரிக்கப்பட்டுள்ள 90,696.30 சதுர அடி நிலத்தின் 394 சதுர அடி நிலத்தின் பிரிக்கப்படாத பங்கு. இது செங்கல்பட்டு பதிவு மாவட்டம் மற்றும் சுங்குவார்சத்திரம் துணைப் பதிவு மாவட்டம். சொத்து எல்லைகள்:வடக்கு:G+2 தளங்கள் பிளாட் பிளாக்-1, தெற்கு:G+3 தளங்கள் பிளாட் பிளாக்-3, கிழக்கு: 30 அடி பிட்மினஸ் சாலை, மேற்கு: MM ஃபோர்ஜிங்ஸ் லிமிடெட் ஆலை,4, படப்பை.

குறைந்தபட்ச கேட்பு விலை: ₹16,00,000/- டேவணித்தொகை (EMD): ₹1,60,000/-, ஏல உயர்வுத்தொகை: ₹20,000/-
சொத்துக்கான டேவணித்தொகை (EMD) சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம்: 17.3.2026, மாலை 3:30 மணிக்குள்.
சொத்துக்களை பார்வையிடும் தேதி மற்றும் நேரம்:10.03.2026 அன்று காலை 10 முதல் மாலை 4 வரை

இ-ஏல தேதி மற்றும் நேரம்: வ.எண் 1&2 17.03.2026 நேரம்: காலை 11:00 மணி முதல் மாலை 4:00 மணி வரை.

விற்பனையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் குறித்த தகவல்களுக்கு, நீங்கள் பின்வரும் இணையதள இணைப்புகளைப் பார்க்கலாம்: https://www.centralbankofindia.co.in https://baanknet.com. சொத்துக்களைப் பார்வையிட மற்றும் இதர விவரங்களுக்கு, பின்வருபவர்களைத் தொடர்பு கொள்ளவும்: அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, தலைமை மேலாளர் - மொபைல் எண்: 9962052877, கிளை மேலாளர் - மொபைல் எண்: 89399 75806. தொடர்பு நேரம்: அனைத்து வேலை நாட்களிலும் காலை 10:00 மணி முதல் மாலை 5:00 மணி வரை.
SARFAESI சட்டம், 2002-ன் விதி 8(6)/9(1)-இன் கீழ் 30 நாட்கள் கால அவகாச விற்பனை அறிவிப்பு.
மேற்காணும் கடனாளிகள்/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்களுக்கு இதன்மூலம் அறிவிப்பது யாதெனில், மேற்காணும் கடன் பாக்கி மற்றும் இதர செலவுகளை ஏலத் தேதிக்கு முன்னர் செலுத்தத் தவறினால், அந்த சொத்து ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு கடன் பாக்கி வசூலிக்கப்படும்.
இடம்: சென்னை அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
தேதி: 25.02.2026 சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா

இந்திய வன சேவை முதன்மைத் தேர்வில்

சங்கர் ஐஏஎஸ் அகாடமி மாணவர்கள் 123 பேர் வெற்றி

■ சென்னை

மத்திய பணியாளர் தேர்வாணையம் (யுபிஎஸ்சி) 2025-ம் ஆண்டில் நடத்திய இந்திய வன சேவை (ஐஎஃப்எஸ்) முதன்மைத் தேர்வு முடிவுகள் வெளியாகியுள்ளன.

இந்தியா முழுவதிலுமிருந்து மொத்தம் 372 மாணவர்கள் நேர்முகத் தேர்வுக்கு தகுதி பெற்றுள்ளனர். இதில் தமிழ்நாட்டிலிருந்து சுமார் 25 மாணவர்கள் நேர்முகத் தேர்வுக்கு தேர்வாகியுள்ளனர். சென்னை, டெல்லி, பெங்களூரு, திருவனந்தபுரம் ஆகிய நகரங்களில் உள்ள சங்கர் ஐஏஎஸ் அகாடமியின் கிளைகளில் பயின்ற மொத்தம் 123 மாணவ, மாணவிகள் நேர்முகத் தேர்வுக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

யுபிஎஸ்